**06.07.2023 அ.வ.எண்.165/2008 பி.வா.சா.1 சின்னக்கண்ணு, க/பெ.கண்ண கவுண்டர்**

**குறுக்கு விசாரணை**

நான் இன்று மருதாடு கிராமத்தில் இருந்து தான் நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன். நான் வந்தவாசி கூட்டுறவு வங்கியில் நான் கடன் பெற்றதாக சொல்வது இந்த வழக்கிற்கு பிறகு தான். நான் கிரையம் பெற்றதும் இந்த வழக்கிற்கு பிறகு தான் என்பது சரிதான். 2ம் பிரதிவாதியிடம் நான் கிரையம் பெற்றபோது கிரைய சொத்து சம்மந்தமாக வழக்கு நிலுவையில் இருந்தது என்பது எனக்கு தெரியும். 1ம் வாதியின் வீட்டை கொளுத்திவிட்டதாக என் மீதும் என் கணவர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் இல்லை. எனக்கு கூலி வேலை செய்ததன் மூலமும் என் மகன்களுக்கு கைத்தொழில் மூலமும் வருமானம் வந்தது. மாடு வைத்தும் வளர்த்தேன். 2ம் பிரதிவாதியிடம் நான் எழுதிப் பெற்ற கிரைய ஆவணம் பெயரளவிலானது என்றும் கிரையத் தொகை எதைனையும் நான் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் அது சரியல்ல. என் கணவர் அவருக்கு கிடைத்த சொத்துக்களை 1951க்கு முன்னரே விற்றுவிட்டார் என்றால் அவர் விற்றுவிட்டார் என்பது சரிதான். எப்போது விற்றார் என்பது எனக்கு தெரியாது. என் கணவர் மீது ஏராளமான வழக்குகள் உள்ளது என்றால் அது சரியல்ல. வழக்கு சொத்து ஆதியில் பிராமணர்களுக்கு சொந்தமான சொத்தாக இருந்தது என்பது சரிதான். 1996ல் நான் கிரையம் பெற்றபோது வில்லங்கம் பார்த்து தான் கிரையம் பெற்றேன். நான் பார்த்த போது வில்லங்கம் ஏதும் இல்லை. 1ம் வாதி ஒரு உடன்படிக்கை பதிவு செய்து அது வில்லங்கத்தில் வந்தது என்றால் அதனை நான் பார்க்கவில்லை. நான் கிரையம் வாங்கிய நிலத்திற்கு எதிரே 1ம் வாதி குடிசை வீட்டில் இருந்து விவசாய பொருட்களை விற்றுக் கொண்டிருந்தார் என்பது சரிதான். வரியெல்லாம் நான் தான் கட்டுகிறேன். நான் தாக்கல் செய்துள்ள வரிரசீதுகளில் திருமண மண்டப பெயர் ஏதும் இல்லை என்றும் அவற்றில் ஒன்று தவிர மற்றவை என் கணவர் பெயரில் உள்ளது என்றும் சொன்னால் அது சரிதான். யார் உரிமையாளரோ அவர் பெயரில் தான் வரி கட்டமுடியும் என்பது சரிதான். என் கணவர் பெயரில் உள்ள ரசீதுகள் வழக்கு சொத்துக்கானவை அல்ல என்றால் அதனை என கணவரிடம் தான் கேட்க வேண்டும். பி.வா.சா.ஆ.10 ரசீதுகள் வீட்டு வரி ரசீதுகள் என்றும் அவை கல்யாண மண்டபத்திற்கு உரியவை அல்ல என்றும் சொன்னால் அது சரியல்ல. வழக்கு சொத்து சொசைட்டி தெருவில் உள்ளது. ரைஸ்மில் தெரு என்பது அதன் பழைய பெயர் ஆகும். ரைஸ்மில்லை விற்றுவிட்டதால் அதன் பெயர் மாறிவிட்டது. ஆனைக்குட்டி கோவில் செல்லும் வழிதான் ரைஸ்மில் தெரு என்றால் அது சரியல்ல. பி.வா.சா.ஆ.9ல் உள்ள ரசீதுகளும் என் கணவர் பெயரில் உள்ளது என்பது சரிதான். என் பெயரில் அனுபவத்தைக் காட்டும் ஆவணம் ஏதும் இல்லை என்றால் அதுசரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மின் கட்டண அட்டைகளும் திருமண மண்டபத்திற்கானவை அல்ல என்றும் அவை வீட்டு மின் இணைப்புக்கு உரியவை என்றும் எனவே வழக்கு சொத்தின் அருகில் திருமண மண்டபம்

ஏதும் இல்லை என்றும் சொன்னால் அது சரியல்ல. நான் கிரையம் வாங்கிய சொத்து ஏற்கனவே ராம ஐயா் என்பவருக்கு சொந்தமாக இருந்தது என்பது சரியல்ல. சாய்கிருஷ்ணன் மற்றும் அவரது சகோதரிகள் மற்றும் ராம ஐயருக்கு இடையில் இதே நீதிமன்றத்தில் பாகபிரிவினை வழக்கு நடந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு இருந்த சொத்து என்பதால் அதனை அபகரிக்க நான் கிரையம் பெற்றுள்ளேன் என்பது சரியல்ல. 1996ல் நான் கிரையம் பெற்ற சொத்தும் பின்னிட்டு 2ம் பிரதிவாதியிடம் கிரையம் பெற்ற சொத்தும் ஒன்று தான் என்பது சரிதான். ஏன் ஒரே சொத்தை இரண்டு முறை கிரையம் பெற்றேன் எனக் கேட்டால் சாய்கிருஷ்ணன் எனக்கு விற்ற பிறகு அதே வரிசையில் 2ம் பிரதிவாதிக்கு சொத்து விற்றாா். நான் 2ம் பிரதிவாதியிடம் இருந்து கிரையம் பெற்றேன். பின்னிட்டு பிரச்சனை ஏற்படக்கூடாது என்பதால் தான் சாய்கிருஷ்ணன் சகோதரியிடம் கிரையம் பெற்றேன் என்பது சரிதான். சௌரி செட்டியாா் மற்றும் 1ம் வாதி எனக்கு முன்னரே கிரையம் பெற்றிருந்தனா் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கிரையம் வாங்கிய சொத்திற்கு தெற்கில் செட்டியாா் காலிமனை இருந்து.

**தொடா் குறுக்கு விசாரணை - ஒத்திவைக்கப்பட்டுள்ளது.**